# ஜோன் ரோல்ஸ்ஸின் (John Rawls) சமூக நீதி பற்றிய கோட்பாடுகள்

ஏ.எல்.எம்.றியால்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**சுருக்கம்**

இக்கட்டுரையானது ஜோன் ரோல்ஸ்ஸின் சமூக நீதி பற்றிய அணுகுமுறை குறித்த பிரச்சினையை பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. ரோல்ஸ் தனது கோட்பாட்டில் சமூக நீதி மூலம், சமூகத்தில் நியாயம் எனும் கருத்தையும் முன்வைக்கிறார். சமூகத்தின் அடிப்பை நிறுவனங்களானது சுதந்திரக் கோட்பாடு, வேறுபாட்டுக் கோட்பாடு என்ற கோட்பாடுகளால் முறைப்படுத்தப்பட வேண்டும் என வாதிடுகின்றார். இந்த வகையில் ரோல்ஸ்ஸின் நீதி பற்றிய ஆய்வின் எல்லைப்பரப்பு, நீதி பற்றிய கோட்பாடுகள், அவற்றை அடைவதற்கான வழிமுறை ஆராய்ச்சிகள் என்பன முக்கியமானவையாக காணப்படுகின்றன. இக்கட்டுரைக்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. சமூகக் கட்டமைப்பின் பிரதான தொழிற்பாடு நற்பலன்களை சமூக அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதாகும். நீதி பற்றிய கோட்பாடு சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பு பற்றி பேசுகின்றது. மாறாகத் தனிநபர் ஒழுக்கப்பண்பு பற்றியதல்ல என்பதும் இக்கட்டுரை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**: சமூக நீதி, ஒழுக்கவியல், சுதந்திரம், வருமானம், பிரதிபலிப்பு சமனிலை

## அறிமுகம்

ஜோன் ரோல்ஸ்ஸின் சமூக நீதி பற்றிய கோட்பாடானது நவீன அரசியல் மெய்யியலின் மரபுரீதியான ஒன்றாக காணப்படுகின்றது. எமது வாழ்வின் பல்வேறு வகையான விடயங்கள் நீதியாகவும், நீதியற்றதாகவும் காணப்படுகின்றன எனப் ஜோன் ரோல்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். சட்டங்கள், நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள், செயல்கள், முடிவுகள், தீர்ப்புக்கள், குற்றச் சாட்டுக்கள், என்பன இவற்றிலடங்குகின்றன. மனித மனப்பாங்கு, நபரின் மனச்சார்பு, பயம் போன்றவற்றையும் நீதியானது, நீதியற்றது என நாம் அழைக்கின்றோம் ஆனால் நீதியின் முதன் நிலை உட்பொருள் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பாகும். ஏனெனில் ஒரு மனிதனின் பிறப்பில் இருந்து வாழ் நாள் முடிவுவரை இது தான் அவனிடத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்த அடிப்படைக் கட்டமைப்பிலேயே அரசியல், பொருளாதாரம், சமூக நிறுவனம் என்ற பாரம்பரிய அமைப்புக்கள் அடங்குகின்றன. எமது சமூகத்தின் அரசியல் யாப்பு, உற்பத்தி சாதனங்களின் தனி உடமைப் போட்டிச் சந்தை, ஒரு துணை மணக் குடும்பம் (Monogamous Family) என்பனவும் இதில் அடங்குகின்றன என ரோல்ஸ் குறிப்பிடுகிறார்.

நீதியின் பிரதான விடயப் பொருள் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பாயின் நேர்மையான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கக் கூடிய, நியாயப்படுத்தக் கூடிய கோட்பாட்டுத் தொகுதியை உருவாக்குவது நீதியில் எழும் பிரச்சினையாகும். சமூகக் கட்டமைப்பின் பிரதான தொழிற்பாடு நற்பலன்களை சமூக அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதாகும். சுதந்திரம், செல்வம், வருமானம், உணவு, உடை, அதிகாரம் என்பன இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்களாகும்.

## நீதியின் எல்லைப் பரப்பு

உண்மை என்பது ஒரு முறைமையான சிந்தனை என்பது போல "சமூக நிறுவனங்களின் முதன்மையான நற்பண்பே நீதியாகும்" (Rawls J: 1971:3). ஒரு கோட்பாடானது எவ்வளவுதான் கவர்ச்சி கரமானதாகவும், பொருளுடையதாகவும் இருந்தாலும், அது உண்மையற்றதாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதுபோலவே சட்டங்களும், நிறுவனங்களும் நல்ல வினைத்திறனுடன், ஒழுங்கமைக்கப்பட்டு ஒரு சீரானதாகக் காணப்பட்டாலும் கூட அங்கு நீதி இல்லாத போது அது ஒன்றில் மீளவுருவாக்கம் செய்யப்பட வேண்டும் அல்லது ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார். இதனாலேதான், நீதியானது சமூக நிறுவனங்களின் உச்ச நற்பண்பாகக் காணப்படுகிறது. இருந்த போதிலும், சமூக நிறுவனங்களில் நீதி மட்டுமே நற்பண்பென்று மட்டும் ரோல்ஸ் கூறவில்லை. மாறாக வினைத்திறன் மிக்க பாரிய செயல்கள் கூட நற்பண்பினைக் கொண்டிருக்கும் என்கிறார். ஆனால் இவற்றை விட ரோல்ஸ் நீதிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். சமூக நீதி என்னும் போது அது சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் ஆரம்ப வடிவமாகும். அதாவது சமூக நிறுவனங்களினுடாக, அடிப்டை உரிமைகள்,

கடமைகள் என்பவற்றை பகிர்ந்தளித்தல் மற்றும் சமூக கூட்டுறவின் மூலமாக நன்மைகளின் பிரிவுகளைத் தீர்மானித்தல் போன்றவற்றையே நாம் கூறலாம். நீதி கோட்பாடு என்பது தனிநபரின் ஒழுக்கத்திற்கான கோட்பாடல்ல. அது பரந்தளவான எதிர்பார்ப்புகளை கொண்ட தனிநபர்களுடைய சமூக நிறுவனங்களை முறைப்படுத்துவதாக அமையும்.

**நீதி பற்றிய பொதுவான எண்ணக்கரு**

சமூகத்தின் அனைத்துப் பிரிவிற்கும் சுதந்திரம், சந்தர்ப்பம், வருமானம், செல்வம் மற்றும் சுய கௌரவத்தின் அடிப்படைகள் போன்றவை சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதில் எந்த விதமான அநீதிகளும் இடம்பெறக் கூடாது. அது போலவே, தனிநபர் சுதந்திரம் மற்றும் பொருளாதார நன்மைகள் ஆகியவைகள் சம அளவான முக்கியத்துவமுடையதாகப் பேணப்பட வேண்டும். இந்த வகையில் மேற்கூறிய நீதியின் பொதுவான எண்ணக்கருவானது ரோல்ஸ்ஸின் கருத்தின் ஒரு பகுதியாகும். அதாவது உயர்தர சமூக நிலைப்பாட்டின் கீழ் மட்டுமே நீதியானது முழுமையாக செயற்படுத்த முடியும். ஒரு சமூகமானது கைத்தொழில் மயமாக்கம் என்ற அபிவிருத்திப் படிநிலைகளை அடையும் முன்னர், அதனை அடைவதற்கு சட்டரீதியாக தனிநபரின் சுதந்திரம் மீறப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நீதி பற்றிய கோட்பாட்டை முழுமையாகக் கையாள வேண்டிய நிலைமை ஏற்படும் வாய்ப்புக் காணப்படுகிறது.

**நீதியின் கோட்பாடுகள்**

நீதியானது பிரதானமாக இரு கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. இதில் நீதியின் முதலாவது கோட்பாட்டினை எடுத்து நோக்கும்போது இது இரண்டாவது கோட்பாட்டை முக்கியத்துவப் படுத்துகின்றது (Kymlicka W. : 1990,p.52). இக் கோட்பாடானது முழுமையாக சுதந்திரத்தைப் பற்றி பேசுகிறது. அதாவது “ஒவ்வொரு நாட்டினரும் ஏனையோருக்கு ஏற்ற ஒத்த சுதந்திரத்தைப் போன்று மிகவும் பரந்த அடிப்படை சுதந்திரத்தை சம அளவில் பெறும் உரிமையுடையவர்கள்” (Rawls J: 1971: 60).

இக் கோட்பாடானது முற்போக்குக்குச் சாதகமான சுதந்திரக் கருத்துக்களுடன் அறிமுகமானதாகும். இது ஜோன் ஸ்டுவேர்ட்மில் “John Stuart Mill” என்பவரால் அவரது “On liberty” எனும் நூலில் மிகவும் தீவிரமாக வலியுறுத்தப்படுகிறது. இந்த நூலில் அவர் “ஒவ்வொரு தனிநபரும் அவர்களால் இயலுமான சுதந்திரத்தை நிறைவாகப் பெற வேண்டும். ஆனால், அத்தகைய சுதந்திரம் ஏனைய தனிநபரின் சுதந்திரத்தை மீறுவதாக அமையக் கூடாது. இவ்வாறான சுதந்திரங்கள் பின்வரும் கோட்பாடுகளினால் உத்தரவாதப்படுத்தப்படுகின்றன.

ஆரசியல் சுதந்திரம், பேசுவதற்கும் ஒன்றுகூடுவதற்குமான சுதந்திரம், சிந்தனை, மனச்சாட்சிப்படி இயங்குவதற்கான சுதந்திரம், விரும்பிய சொத்தை தனிநபர் வைத்திருப்பதற்கான சுதந்திரம், விசாரணை இன்றி கைதுசெய்யப்படுதல், அத்துமீறிப் பிடிக்கப்படல் போன்றவற்றிற்கான சுதந்திரம் ஆகியவற்றுடன் ஒன்றினைக்கப்பட்டு, சட்டத்தின் ஆட்சி எனும் எண்ணக்கருவின் மூலம் வரையறுக்கப்படுகின்றது”. (Ibid.,p.61) இக் கோட்பாடானது குடிமக்களின் எதிர்மறைச் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துகின்றது. ஆனால், ரோல்ஸ் மரபுரீதியான சுதந்திரத்தின் பாரம்பரியத்தின் மீது கவனம் செலுத்துகின்றார். இது தனிநபர்களின் சுதந்திரத்தை வலியுறுத்துவதாக அமையும்.

வரலாற்று ரிதியாக நீதிபற்றிய கோட்பாட்டின் சிந்தனையானது லொக் (Locke) இன் பரம்பரையிலிருந்தே வெளிப்படுகின்றது. சமகால அரசியல் சிந்தனையில் இந்த எண்ணங்கள் நோஸிக் (Nozick) போன்ற சுதந்திரவாதிகளினால் மிகவும் உறுதியாக வாதிடப்படுகின்றன. ஆனால், சில சுதந்திரவாதிகள் தனிநபர் மீதான சுதந்திரத்தின் மீது அக்கறை காட்டவில்லை. சமூகத்தில் ஏதோ ஓர் வகையில் தனிநபர் சுதந்திரமானது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் காணப்படுகின்றது. இதன்படி ரோல்ஸ்ஸின் முதலாவதான நீதிபற்றிய இக் கோட்பாடு மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

நீதி பற்றிய இந்த இரண்டாவது கோட்பாடானது வேறுபாட்டுக் கோட்பாடு எனவும் அழைக்கப்படுகின்றது. இக்கோட்பாடானது எவ்வாறு பொருளாதார நலன்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. இது இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

01. முறையான வேறுபாட்டுக் கோட்பாடு
02. சம சந்தர்ப்பக் கோட்பாடு

முறையான வேறுபாட்டுக் கோட்பாடு என்பது சமூகத்தில் அடையப்பட்ட செல்வத்தைப் பகிர்ந்தளிக்கும் கோட்பாடு ஆகும். இது அடிப்படையாக வரிவிதித்தலையும், அவற்றைப்

பகிர்ந்தளிப்பதனையும் செயற்படுத்துவதற்கான கோட்பாடாகும்.

சமசந்தர்ப்பக் கோட்பாடானது ஆவலுடன் அடைய விரும்பும் சமூக அந்தஸ்த்தின் நீதியை முறைமைப்படுத்துகின்றது. அதாவது வேலை மற்றும் அதிகார அந்தஸ்து போன்றவையாகும்.
நீதிபற்றிய இரண்டாவது கோட்பாடானது முதலாவது மதிப்பீட்டில் வருமானம் மற்றும் செல்வப் பங்கீடு அதிகார வேறுபாடுகள் மற்றும் கடமைகள், கட்டளைகளின் தொடர்பு ஆகியவற்றை பயன்படுத்தும் நிறுவனங்கள் போன்றவற்றின் வடிவங்களைப் பயன்படுத்துகின்றது.

முறையான வேறுபாட்டுக் கோட்பாடானது குறைந்தளவு நலனைக் கொண்டுள்ள சமூகத்தை உச்ச நலனைப் பெறவைக்கும் வகையில் பொருளாதார சமூக சமமின்மை போன்றன ஒழுங்குபடுத்தப்படவேண்டும் என்பன பற்றிக் கூறுகின்றது. பொருளாதார சமமின்மைக்கான நீதி என்னவென்றால் குறைந்தளவு செல்வத்திலும் உச்ச நன்மையைப் பெறுவதாகும். இதற்கு ரோல்ஸ்ஸின்'Eegalitarianism' உறுதுணையான சான்றாதாரமாகும்.

சமசந்தர்ப்பக் கோட்பாடானது கூறுவது யாதெனில் தொழில் போன்ற சமூக அந்தஸ்துக்கள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டிருத்தல் வேண்டும். இக்கோட்பாடானது பாகுபாட்டுக் கோட்பாட்டிற்கு எதிரானதாகக் காணப்படுகின்றது. ஏனெனில், உண்மையில் தனிநபர்கள் அந்த அந்தஸ்தை அடைய சமசந்தர்ப்பம் கொடுக்கப்படல் வேண்டும். எனவே அளவீடுகள் எடுக்கப்பட்டு முறையான பாகத்தை அளிக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

சமசந்தர்ப்பக் கோட்பாடானது 'நேர்ச்சுதந்திரக் கோட்பாடு' எனவும் அழைக்கப்படுகின்றது. நனிநபர்களுக்கு எதிர்மறையான சுதந்திரம் மாத்திரம் போதாது. ஏனெனில் இயற்கையான சமமின்மை தற்செயலாக நடைபெறும், பண்புகள் கணக்கில் எடுக்கப்படாதவரை பாரிய எண்ணிக்கையான தனிநபர்கள் தமது எதிர்மறை சுதந்திரத்தைப் பொருளுள்ள வகையில் உபயோகிக்க முடியாமல் போகலாம் என்ற காரணத்தினால் நேர்ச்சுதந்திரம் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. வரலாற்று ரீதியாக நேர்ச்சுதந்திர எண்ணக்கருவானது ரூசோ (Rousseau) மற்றும் காண்டின் (Kant), மார்க்ஸ் (Marx) போன்றோரின் வரிசையில் வந்த ஒன்றாகும் (Ibid.,p.11). ரோல்ஸ்ஸின் சிந்தனை காண்டர்களின் அடிப்படையைப் பின்பற்றி உருவானதாகும் அது மார்க்ஸின் வழியாக வந்ததல்ல.

**பிரதிபலிப்பு சமனிலை**

ரோல்ஸ்ஸின் கோட்பாட்டின் மையக் கருத்தானது பிரதிபலிப்பு சமனிலையாகும் (S M Okin and J Mansbridge, :1994, p.62) 10 இதனை அவரது விவாதங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும். தனது நீதி பற்றிய ஒழுக்கவியலில் ரோல்ஸ் தனது ஒருங்கிணைக்கப்பட்ட தீர்ப்புக்களின் மூலம் தாக்கீடு செய்கின்றார்.

ஒழுக்க மெய்யியலின் (Moral philosophy) நோக்கமானது மாறாத உண்மைகளை (நிலையான உண்மைகளைக்) காண்பது அன்று. அது பௌதீகவியலைப் போன்று மாறாத உண்மைகளைக் கண்டறிவது அல்ல. அது இலக்கணத்தைப் போன்றதாகும். இதனைக் கற்றறிவதன் நோக்கம், உலகறிந்த இலக்கண உண்மையை தேடுவதற்காக அல்லாமல், நாம் பயன்படுத்தும் நமது தாய்மொழியினை புரிந்துகொள்வதற்கே ஆகும். ஒழுக்கவியல் தத்துவத்தின் உண்மையான மைய நோக்கமானது எமது நம்பிக்கையின் கருத்தினையும், எமது உணர்ச்சிகளையும் புரிந்து கொள்வதாகும். பிரதிபலிப்பு சமநிலையின் செயன்முறையானது எமது உறுதியான நம்பிக்கையின் உறுதிப் பாட்டிலிருந்து ஆரம்பமாகின்றது (R J.Sample. : 2004, P.230).

ரோல்ஸ்ஸின் நீதி பற்றிய மிகவும் உணர்ச்சி பூர்வமான முக்கியமான கருத்து என்னவெனில், தீர்ப்புவழங்கும் போது நீதியானவற்றை அடிமைப்படுத்தல், இனவாதம், போன்றவற்றை முற்றிலும் அநீதி எனக்கூறி சரியான தீர்ப்பை வழங்குவதாகும். ஆனால், இங்கு அடிமைப்படுத்தல் தவறு என்பது யாவரும் அறிந்த விடயமாக இருப்பதனால், அதனை நிரூபிக்காமல், அது எவ்வாறு நிதிபதியின் தீர்ப்பின் மூலம் அறிந்துகொள்ளலாம் என்பதே முக்கியமாகக் காணப்படுகின்றது.

பிரதிபலிப்புச் சமநிலைசெயன்முறையானது, எமது உறுதியான நம்பிக்கையை அறிந்து அதனைக் கோட்பாடாக மாற்றுதலாகும். பின்னர் எமது தீர்ப்பிற்கான கோட்பாட்டின் அடிப்படையில் வெளியீடு செய்வதாகும். இது தர்க்க ரீதியானதாகவோ, விஞ்ஞான ரீதியானதாகவோ இல்லாமல் தீர்க்கப்பட வழக்குகளின் மீது உள்ளுணர்வு மூலமான தீர்ப்பினை வழங்குகின்றது. பிரதிபலிப்புச்

சமநிலையின் இறுதி நிலையானது அளிக்கப்படும் தீர்ப்புக்கள் சமநிலை யுடையதாகவும், ரோல்ஸ்ஸின் கருத்துக்களையும், கோட்பாடுகளையும் உள்ளடக்கியதாகவும் காணப்பட வேண்டும் (Rawls J: 1971:48).

ஒழுக்கவியல் தத்துவத்தின் நிலைக்கருத்தானது ஒதுக்கப்பட்ட மனிதனின் தீர்ப்பு மீதான கருத்தினைக் குறிக்கின்றது. அதாவது ஏற்கனவே தீர்க்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்களின் மூலம் உருவாக்குவதாகும். சில சந்தர்ப்பங்களில் இது பிரதிபலிக்கும் சமநிலையோடும் ஒத்துப்போகாமை இந்த வாத்தியம் முடிக்கப்பட வேண்டும் இதன் பின்னரே குறிப்பிட்ட ஒரு நபர் வழங்கப்பட்ட தீர்ப்புக்களின் மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றார். இதன் மூலம் ரோல்ஸ்ஸின் விவாதத்தினடிப்படையில் உண்மைத் தன்மையானது சமநிலைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். மாறாக அடிமைப்படுத்தல், இனவாதம் என்பவற்றிற்கு உட்பட்டதாக அமையக்கூடாது (S. Maffettone, :2010, p.156).

**தீர்ப்பின் ஆரம்பநிலை**

ரோல்ஸ்ஸினால் வெளியிடப்பட்ட எண்ணி லடங்காத கருத்துக்கள் அனைத்தும் சமூகத்துடன் இணைந்து ஒன்றாகப் பழகி அதனை முன்வைக்கப்பட்ட கருத்துக்களா? அல்லது அவருடைய சொந்தக் கருத்துக்களா? என்பதனை அறிவதே ஆரம்ப நிலையாகும். இது ஒரு சம்பவத்தின் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அதாவது ஒதுக்கப்பட்ட சமுதாயத்தின் நிலையை ஆய்வு செய்வதன் மூலமாகவே இந்த ஆரம்ப நிலையை முன்வைக்கின்றார்.

தீர்ப்பு வழங்குபவர் பற்றிக் கூறுகையில், சமூகத்தில் அவர் வகிக்கும் பங்கு, அந்தஸ்து, அனுபவம், ஆளுமை, திறன்கள் என்பவற்றை கவனத்திற்கொள்ளாது ஒதுக்கப்பட்ட மக்களுக்காக அவர்களின் பின்னணியிலிருந்து தீர்ப்பினை வழங்குகின்றனர். இதனால் யாருமே எவ்விதமான சாதக பாதகங்களையும் அனுபவிப்பது கிடையாது.

ஆரம்ப நிலையின் தீர்ப்பு எவ்வாறு பெறப்படுகின்றது எனில், சில தனிநபர்களின் உண்மை நிலையிலிருந்து பெறப்படுகின்றது. இது ஒதுக்கப்பட்ட மக்களின் நிலையிலிருந்தே கூறப்படுகின்றதே தவிர, சரியான எண்ணக்கருவாக அல்லது ஒரு அரசியல் விவாதமாகவோ அமையவில்லை.

ஆரம்ப நிலையானது ஆரம்ப சமூகப் பொருள்கள் (Primary social goods) உடன் வரையறை செய்யப்படுகின்றது. ஆரம்ப சமூகப் பொருள்கள் என்பவை அரசியல் உரிமை, சுதந்திரம், சுதந்திரத்தின் முக்கியத்தும், பொருளியல், மற்றும் சமூகவியல் நன்மைகள் என்பவற்றை வரையறை செய்கின்றது. உண்மை நிலையில் இருக்கும் தனிநபர்கள் அனைவரும் தங்களது வகிபங்கை அதிகரிக்க விரும்புகின்றனர் (Rawls J: 1971: 62). ரோல்ஸ்ஸின் உண்மை நிலை பற்றிய விவாதம் இரு வகைப்படுகின்றது.

1. வழங்கப்படுகின்ற தீர்ப்பானது ஆதிக்கம் செலுத்துகின்ற மாற்றீடுகளிலிருந்து பெறப்படுகின்றது.
2. (Hobbs) ஹெப்ஸ், (Kant) காண்ட் என்ற அறிஞர்களின் வரலாற்று உண்மையிலிருந்து எடுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களின் நிலைகளானது சமூக நிறுவனங்களில் உயர்வாகக் காணப்படுகின்றது. ஹெப்ஸ் (Hobbs) சுதந்திரம் பற்றிக் கூறுகையில், “மக்கள் தாங்கள் விரும்பிய வழியில் செயற்படுவதே சுதந்திரம் எனக் கூறுகின்றார்”, ஆனால் காண்ட் (Kant) மக்கள் தாங்கள் ஒத்துக்கொண்ட வழிமுறைகளின் கீழ் வாழ்வதே சுதந்திரம் எனக்கூறுகின்றார்.

**(ரோல்ஸ்ஸின் விவாதம் தொடர்பான இரு கோட்பாடுகள்)**

**ஒழுக்கரீதியான விவாதம்**

ரோல்ஸ்ஸின் நீதிக்கான ஒழுக்கவியல் அல்லது தூண்டுதல் விவாதமானது வேறுபாட்டுக் கோட்பாட்டின் நீதிபற்றி கவனம் செலுத்துகின்றது. இந்த ஒழுக்கவியல் விவாதத்தின் முக்கிய பகுதி யாதெனில், அது இயற்கை வள வேறுபாடு மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் நீதி (Moral desert) பற்றி கரிசனை செலுத்துகின்றது. தற்போது நீதி குறித்த பொதுவான பார்வை யாதெனில், அது ஒதுக்கப்பட்ட மக்களுடன் சமனிலைப் படுகின்றது. மக்கள் அவர்கள் பெற்றுக் கொள்வதனைப் பொறுத்து நீதியானது அடையப்படுகின்றது. சமூகமட்டத்தில் இதன் பொருள் யாதெனில், மக்களின் பொதுப்பொருட்கள் மீதான பங்குபற்றுதலின் அடிப்படையிலேயே மக்களுக்கான வெகுமதி அளிக்கப்படுகின்றது. ஆனால், ரோல்ஸ் இதனை மறுக்கின்றார். ஏனெனில் ஒருவரின் சமூகப் பங்குபற்றுதலானது இயற்கை வளவேறுபாட்டின் இணைப்புடனும், அவர் சமூகத்தில் ஆரம்பிக்கின்ற இடத்தில் அவை இரண்டும் பெற முடியாதுள்ளது என்பதாகும்.

எவருமே தமது உயர்ந்த இயற்கை கொள்ளளவையோ/ திறமையையோ சமூகத்தின் ஆரம்ப இடத்தில் பெற்றுக்கொள்வதில்லை. ஆனால் ஒருவர் இந்த திறமைப் பேற்றை அழிக்கவேண்டும் என்பதனை விரும்புவதில்லை. இத்தகைய யாவரும் மாறாக கையாளுவதற்கு மாற்றுவழியுள்ளது. இந்த அடிப்படைக் கட்டமைப்பானது ஒழுங்கமைக்கப்பட முடியும். ஆகவே இந்த நடைமுறைக்குச் சாத்தியமான / சாத்தியமாகாத வேலையானது குறைந்த அதிஷ்டத்துடன் தொடர்புபட்டுள்ளது அதனால்தான் நாம் வேறுபாட்டுக் கோட்பாட்டை நோக்கிச் செல்கின்றோம். ஆகையால், எவருமே விதிகளுக்குக் கட்டுப்படாது இயற்கை வழங்கிய சொத்துக்களை பெறுவதுமில்லை. ஆகவே நன்மைகளை மீளளித்து ஈடு செய்வது தொடர்பில் பெறுவதும் கொடுப்பதும் இன்றி அவர்களின் ஆரம்ப இடத்திலேயே சமூகத்தில் இருக்கின்றனர்.

ரோல்ஸ், தனது கோட்பாட்டில் நாம் எமது உண்மை நிலையினால் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது இயற்கையான திறமைகள் குறிப்பிட்டு சொல்லக்கூடிய நிலையிலிருந்து அந்த உண்மை நிலை மற்றும் இயற்கையான திறமைகள் நன்மைக்கோ, தீமைக்கோ, ஏற்றவராக இல்லாதிருக்கச் செய்கின்றோம். ஆகையால், நாம் எவ்வாறுதான் இயற்கையின் திறமைகளைப் பயன்படுத்தினாலும், அவை நன்மை, தீமையை ஏற்படுத்தாமல் இருப்பதற்கு துணை புரிவதில்லை. இதனுடைய முக்கியத் துவத்தினைக் குறிப்பிடும்போதும், எவரும் அவர்களின் தொழிலாளர்களின் பலனைப் பெறும் விடயத்தில் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ ஏற்றவராக இல்லை. இது மிகவும் முக்கியமானது. ஒவ்வாத குழப்பமடைந்த நிலை இல்லை. இருந்தபோதிலும், ரோல்ஸ் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்பவரை நிராகரிக்கின்றார். சமூகத்தினால் சட்டரீதியாக அதிகாரம் அழிக்கப்பட்டு வாழ்பவர்களையே தனது கருத்தில் முன்வைக்கின்றார். இது எமது கூட்டுறவுடன் கூடிய சமூக நீதியின் ஒழுங்கமைந்த தன்மையாகும். அவை, எவர் விதி, நீதி என்பவைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றார்களோ அவர்களுக்கு அதிகமான நன்மைகளைக் கொடுக்கின்றண.

முக்கியமான வித்தியாசம் என்னவென்றால் சமூகத்துடன் சேர்ந்து வாழாதவர்களே விதிகளை வகுக்க எத்தனிக்கின்றார்கள். அதேசமயம் சட்டப்படி அதிகாரம் பெற்று வாழ்பவர்கள் இவ்வாறு இல்லை. ரோல்ஸ், லோக்(Locke) ஐ விரும்பவில்லை. சொத்துக்கள் என்று வரும்போது சமூகத்துடன் சேர்ந்து வாழாதவர்கள் என்ற ஒரு பிரிவில்லை. சட்டரீதியாக சமூகத்துடன் சேர்ந்து வாழ்பவர்களின் சொத்துக்கள் அதிகரிக்கின்றன. ஆனால் அங்கு ஒரேயொரு சமூக முறைமைதான் காணப்படுகின்றது. இந்த அடிப்படை முறைமையினைத் தெரிவு செய்யும் விடயத்தில் அவர்கள் எதுவுமே செய்திருக்கவில்லை. சமூகத்துடன் சேர்ந்து வாழாதவர்களைப் பிரயோகிக்காத வரை எல்லோரும் சமமானவர்கள். இது சமூகத்தின் செல்வங்கள் ஒவ்வொருவர் மத்தியிலும் சமமாகப் பகிரப்படவேண்டும் என்பதனைக் காட்டுகின்றது. ஆனால், அங்கு பல காரணங்களால் வேறொரு சாத்தியப்பாடும் இருக்கின்றது. அது சமூகத்தில் எங்கொல்லாம் சமமற்ற வளப்பகிர்வு இருக்கின்றதோ, அங்கெல்லாம் படு மோசமான நிலைமை காணப்படும். இதுதான் அடிப்படைப் பொருளியலாகும்.

இவ்வாறான சமமற்ற வளப்பகிர்வானது ஒருவரை பொருளாதார நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு அதிகம் தூண்டுகின்றது. எவர்கள் வளங்களை சிறந்தமுறையில் பயன்படுத்துகின்றார்களோ, அவர்களுக்கு சிறந்த ஊக்கத்தினை அளிக்கின்றது. இதிலிருந்து அளவுக்கதிகமான செல்வத்தைப் பெறமுடிகின்றது. மேலும், படுமோசமான நிலைமைகள் அதிகரிக்கின்றன. ஒத்த சமநிலைத் தன்மையினைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு காரணமும் கிடையாது. சில சமமற்ற வளப்பகிர்வு இடம்பெறும்போது படுமோசமான நிலைமைகள் உருவாகி அவை நன்மைகள் இடம் பெற வழிகோலுகின்றது. முக்கியமாக ரோல்ஸ் இந்த விதியில், மற்றவர்களின் செல்வம்/வெற்றியைக் கண்டு பொறாமை கொள்வதனைக் குறிப்பிடுகின்றார்.

ரோல்ஸ் தமது தாராண்மைக் கோட்பாட்டில் சகோதரத்துவத்தினைப் பற்றிப் பேசுகின்றார். “நாம் பிரான்சியப் புரட்சி பற்றி அறிந்துள்ளோம். அது விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை வலியுறுத்தி நடைபெற்றது. அந்தத் தாராண்மைக் கொள்கை வழியில் சமத்துவம் விடுதலை ஆகிய இரண்டும் பரந்து விரிந்த அளவில் கிடைத்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் சகோதரத்துவம் அலட்சியம் செய்யப்பட்டது.

ரோல்ஸ், இங்கு மாறுபாட்டுத் தத்துவமானது இந்த இடைவெளியினை நிரப்புகின்றது என்கின்றார். தன்னிடம் இல்லை என்றிருந்தாலும் மற்றவர்களின் நன்மையில் அக்கறை செலுத்தப்படுகின்றது. இது சகோதரத்துவத்தின் மூல தத்துவமாகும்.

இதற்கு சிறந்த தற்கால உதாரணம் குடும்பம் எனும் சமூக நிறுவனமாகும். அனைத்து உறுப்பினர்களும் குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்கின்றனர் வேறுபாட்டுத் தத்துவம் இந்த நிலையை குழு, சமூதாயத்திற்கு பிரயோகிக்கின்றது.

**ஆரம்ப நிலை பற்றிய விவாதம்**

ரோல்ஸ், ஆரம்ப நிலையிலிருந்தே நிதியின் இரு தத்துவங்களை விளக்குகின்றார். ஆரம்ப நிலையின் பண்புகள் உயர்ந்த நிகழ்வுகளை மையப்படுத்தியதாக அதனுடைய விளக்கம் அமைகின்றது. இது விவேகத்துடன் தெரிவுகளை மேற்கொள்ளும் தந்திரோபாயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அது ‘Maximin’ எனப்படும். அதாவது, குறைந்த அளவுள்ளவற்றை அதிகமாக்கும் தந்திரோபாயமாகும். அல்லது ஏனைய விளைவுகளிலிருந்து பாதகமான சாத்தியப்பாடுகளைத் தேர்வு செய்வதனை விட குறிப்பிட்ட விளைவிலுள்ள சாத்தியப்பாடுகளை தெரிவு செய்வதாகும். இதனை ரோல்ஸ், பயன் நெறிவாதம் (Utilitarianism) என்கிறார்.

நாம் பார்க்கும்போது தனி நபர்கள் சமூதாயத்திலுள்ள மிக உயர்ந்த பொதுவான விடயங்களை மட்டும் ஆரம்ப நிலையில் அறிந்திருந்தார்கள். ஆனால் சமூகத்தில் அவர்களின் ஸ்தானங்களை அறிய வில்லை. பொருள் சார்ந்த கருதுகோள்களை அறியவில்லை. தெரிவு என்பது இப்போதும் சரி, அதற்குப் பிறகும் சரி, கருதத்தக்க நிச்சயமற்ற தன்மை நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. முற்றிலும் அவைகள் உறுதிப்பாடற்ற நிலையிலேயே காணப்படுகின்றன.

அறிவின்மை எனும் முகத்திரையானது, இன்றியமையாத சாத்தியப்பாடற்று நிகழக்கூடிய கணிப்பீடுகளை உருவாக்குகிறது. இது எமக்கு நிகழக்கூடியவைகள் பற்றிய எந்த அறிவும் இல்லை என்கிறது. நாம் ஒவ்வொரு சாத்தியப்பாடுகளுக்கும் சமமான நிகழக்கூடிய விடயங்களை எதிர்கொள்கிறோம். இது பற்றாக்குறை அடிப்படைத் தத்துவமாகும். ஆனால் அது ஆரம்ப நிலையில் மிகவும் பிரச்சினையை ஏற்படுத்திய விடயமாகக் காணப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு நிழகக்கூடிய விடயங்களும் நெருக்கடியை ஏற்படுத்துவதில் சமமான நிலையில் காணப்படுகின்றது. இது மிகவும் ஆபத்தானதும் தவறானதுமாகும். சாதகமான சிறியளவான இலாபங்களைப் பெற்று குழுக்கள் இறுதிவரை காணப்படுகின்றன. இதன் காரணமாய் ஆரம்பத்தில் பற்றாக்குறை அடிப்படைத் தத்துவத்தினை பகுத்தறிவு ரீதியாக மேற்கொள்ளவில்லை. மேலும், சாதகமான நிலைமைகளை ஊக்குவிப்பதற்கான பகுத்தறிவும் இல்லை. ஒரு குழுவானது விருப்பங்களை முன்னேற்றுவதற்கான நல்லெண்ணமும் காணப்படவில்லை.

ஒரு வேளை ‘Maximin’ தத்துவத்திற்கான பிரதான காரணம் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பினைச் சரிப்படுத்தும் தெரிவாகக் காணப்படுகின்றது. தனிமனிதர்களின் வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் முக்கியமான பாகமாக தெரிவு காணப்படுகின்றது. நிகழக்கூடிய விடயங்கள் சமூகத்தில் உயர்ந்த வகுப்புக்களில் அதிகமாக இருக்கும். அதேவேளை உயர்ந்த குழுக்களின் மத்தியில் குறைவாகக் காணப்படுகின்றது. இது பகுத்தறிவு அற்ற ரீதியில் ஊக்குவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக நன்மைபெறும் குழுக்களின் மத்தியில் இது முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக அடிமைகளைக் குறிப்பிடலாம்.

இருப்பினும், ஆரம்ப நிலையில் ஊகங்களை மேற்கொண்டதனால் அதிகமான விடயங்களைப் பெற்றிருக்கலாம். அவர்கள் தமக்கிடையே வகுப்புக்களை தத்துவங்களாகத் தேர்ந்டெடுத்திருக்கின்றோம். இது பகுத்தறிவு ரீதியற்ற வகையில் செய்யப்பட்ட ஒன்றாகும். இதன் காரணமாக ஓர் அடிமை இறுதிவரை அடிமையாகவே இருக்கின்றார். இதனால் ஒவ்வொருவரும் ‘Maximin’ முறையினை பிரயோகிக்க வேண்டும். மேலும், ஒவ்வொருவரும் மிகக் குறைந்தளவும் சான்றளிக்கக் கூடியதுமான நீதியான தத்துவங்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஒருவர் தவறான முறைமை ஓழித்தாலன்றி அடிமைப்படுத்தப்பட்ட நிலை தொடர்வதற்கு எந்த சந்தர்ப்பமுமில்லை எனலாம்.

இப்போது தெளிவாகக் குறிப்பிடுவது என்னவெனில், ஆரம்ப நிலையில் தனிநபர்களுக்கு ஏனைய பதிலீடுகள் வழங்கப்படுகின்றது. இது நியாயத்தின் நீதி (justice as fairness) ஆகும். இத்தகைய மாற்றீடுகள் முதல்தரமானது, சராசரி பயன்நெறிமுறைக்கோட்பாடு மற்றும் முழுமைத்தத்துவம் என்பன இவற்றுள் உள்ளடங்குகின்றன. இங்கு பிரதிபலிப்பு சமநிலைக் கோட்பாட்டினை மீளக் கொண்டு வருவது ஏற்புடையது.

சிலர் ரோல்ஸ்ஸின் செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவிக்கின்றனர். இது நீதித்தத்துவத்திற்கான தெரிவினை மட்டுப்படுத்தும் ஒன்றாக

மாற்றுகின்றது. ஆனால், செயற்பாட்டின் முழுவடிவமும் நீதித் தத்துவத்தின் வடிவமாக காணப்பட பழமை வாய்ந்த மனவெழுச்சிகள் பிரதிபலிப்புக் கோட்பாட்டில் இணைந் தவையாகக் காணப்படும் சாத்தியப்பாடுகள் மிகவும் நெருக்கமாகக் காணப்படுகின்றன. ஆகையால் நீதியின் சாத்தியமான அனைத்துக் கோட்பாடுகளும் இன்றியமை யாதனவையல்ல. நீதியின் இரண்டு பிரதிபலிப்புக் கோட்பாட்டுடன் மிகவும் நெருக்கமானதாக எமது பழமைவாய்ந்த மனவெழுச்சிகள் காணப்படுகின்றன. இதேவாதம் சராசரி பயன்நெறிமுறைக் கோட்பாட்டிற்கும் பிரயோகிக்கப்படுகின்றது.

ஒரு சமூகம் சராசரி செல்வ வாழ்க்கையினைக் கொண்டு காணப்படுகின்றது. சரிநிகர் பயன்நெறிமுறைக் கோட்பாடு உயர்தர பயன்நெறிமுறைக் கோட்பாட்டினை விட அதிகமான சரிநிகர் தத்துவத்தின் நிகழ்வுகளை முன்கொணரச் செய்கின்றது. ஆனால் பிரச்சினைகள் ஒன்றுதான் ஏனைய குழுக்களின் மொத்தமான சேவைகள் ஒருகுழுவின் ஆதாயத்தில் சேர்க்கப்படும்போது சராசரி ஆதாயம் பெரிது படுத்தப்படலாம். அடிமைத்தனம் போன்ற முறையின் கடுமையான நடவடிக்கைகள் சிறந்த பெறுபேறுகள் அல்ல. இதனால் ஆரம்ப நிலையிலுள்ள குழுக்களில் இருந்த சராசரி பயன்நெறிமுறைக்கோட்பாடு ஏற்றுக்கொள்ள முடியாது போனது.

முழுமைத்தத்துவம் சில காரணங்களால் நிராகரிக்கப்படுகின்றது. சமூகம் நல்ல விடயங்களைக் கருத்திற் கொண்டு சேவையாற்றுகின்றது. இது ஓர் கருத்தியல் மட்டுமாகும். நீதியானது சமூகத்தில் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். எனவே அது நல்ல விடயங்களைச் செய்ய வேண்டும். ஆனால் தற்போது உயர்ந்த ஆட்சி, உயர்ந்த தனிநபர்கள் போன்றவற்றால் வகுக்கப்படுகின்றது. ஆரம்ப நிலையில் இது தனிநபர்களால் நிராகரிக்கப்பட்டது. இருந்தபோதிலும் குழுக்கள் நல்ல விடயங்களில் முக்கிய கருத்துருவாக்கங்களை அறிந்திருக்கவில்லை. மேலும் வாழ்க்கைத் திட்டத்தினை அறியவில்லை. ஓர் திட்டத்தினைக்கூட வடிவமாக்கும் சிறந்த அறிவைக்கூட அறியவில்லை. இதனால் அவர்கள் நீதியின் தத்துவத்தினை தெரிவு செய்யவில்லை. ஆரம்ப நிலையில் நிகழக்கூடிய விடயங்களை பகுத்தறிவு ரீதியாக கணிப்பதற்கு எந்தவொரு வழியும் இல்லை. இது ஒருவரின் அறியாமை எனும் முகத்திரை உயர்வதனைக் காட்டுகின்றது. சமூகத்தில் உயர்ந்த நல்ல விடயங்கள் பற்றிய கருத்துக்களுக்கு இவை எதிராக இருந்தன. உதாரணமாக, நீட்சேயின் உயர்குலத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ மத நம்பிக்கையினரின் செயற்பாடு, கிறிஸ்தவ கடவுள்கள், குருமார்கள், ஆட்சியாளர்கள், நீட்சேயின் கலைஞர்களின் செயற்பாடுகளைக் கூறலாம். இதன் காரணமாக ஆரம்ப நிலையில் முழுமைத் தத்துவம் பேணப்படவில்லை.

மேற்கூறப்பட்ட நீதியின் எண்ணக்கரு நிராகரிப்பு, நீதியின் இரட்டைத் தத்துவம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு சாத்தியமாய் மாறியது. உண்மையிலேயே ஆரம்ப நிலையிலுள்ள குழுக்கள் அதிகமான காரணங்களால் மாற்றீட்டுத் தூண்டுதல்களை நிராகரித்து இரட்டைத் தத்தவத்தினை வழிநடாத்தவதற்கு உதவின. முதலாவதாக இரட்டைத் தத்துவம் 'Maximin' அடிப்படைத் தத்தவத்தினை திருப்திப்படுத்துகின்றது. விடுதலை, சுதந்திரம் சமமாக இருந்தன. அதிக பரவலாக சாத்தியப்பாடுகள் காணப்பட்டன. பொருளியல் நன்மைகள் பகிர்ந்தளிக்கப்பட்டடன. இதனால் அவர்கள் உயர்ந்த அதிகப்படியான நன்மைகளைப் பெற்றார்கள். இதன் காரணமாய் மாற்றுவழிகளை விட, நியாயத்தின் நீதி குழுக்களுக்கு நன்மைகளை வழங்கியது.

நியாயத்தின் நீதி, மாற்று வழிகளைவிட உறுதியாக நீடித்திருந்தது. ஒரு தனிநபர் தானாக ஊகித்து பயன்நெறி முறைக்கோட்பாட்டை தெரிவு செய்வதால் அது அவரை இறுதிவரை அடிமைத்தனமாக்கும். இது மிகவும் கஷ்டமான விடயமாகும். ஆனால் இரட்டைத் தத்துவத்தில் எந்தவொரு பிரச்சினையும் தோன்றவில்லை. நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டு சமூகத்தில் வாழும் தனிநபர்கள் நியாயமான நீதியின் ஆட்சியினை அவர்களாகவே உணர்ந்துகொள்ள முடியும். நியாயத்தின் நீதிப் பிரஜைகள் மத்தியில், நீதி பற்றிய அறிவினைத் தோற்றுவிக்கிறது. பயன்நெறிமுறைக் கோட்பாட்டுக் காலத்தில் தம்மை விட மற்றவர்களைப் புரிவதில் அக்கறை காட்டினார்கள்.

அனேகமான மிகப்பெரிய அனுகூலம் நியாயத்தின் நீதியானது தனிநபர்களுக்கு சுயமதிப்பினை வழங்க துணைபுரிகின்றது. சுய கௌரவம் மிகவும் முக்கியமானதாகும். இத்தகைய சுயகௌரவம் இல்லாவிட்டால் எமது நடவடிக்கைகள் பெறுமதியற்றதாக, குறிக்கோளற்றதாக இருக்கும். வாழ்வதற்கான திட்டத்தினை பின்பற்றி நடப்பதற்கு சுயகௌரவம் என்பதை பாதுகாக்க வேண்டும். இதுவே ஆரம்ப நிலையில் வாழ்ந்த தனிநபர்களின் நோக்கமாக இருந்தது.

எமக்காக மற்றவர்கள் மரியாதை செலுத்துவதால் சுய கௌரவம் பாதிப்படைகின்றது. சமூகத்தின் தேவையானது அதன் அடிப்படைத் தத்துவத்திற்குள் சுய கௌரவத்தினை இணைத்துக் கொள்வதாகும்.

இந்த விடயத்தை நீதியின் இரு தத்துவத்தினால் அடைந்து கொள்ளலாம் என ரோல்ஸ் நம்புகிறார். முதலாவது தத்துவம் :- எவருமே சமமான பிரஜைகள் என்ற விடயத்தில் மறுப்பு சொல்வதற்கில்லை. இதில் சுய கௌரவம் என்பது முக்கியமானது. இரண்டாவது தத்துவமானது :- சமூகக் கூட்டுறவின் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதனை ஏற்றுக்கொள்கின்றது. இது அனைவருக்கும் நன்மை கிடைக்கச் செய்கின்றது. ஒவ்வொருவரும் மதிக்கப்பட வேண்டும். பயன்நெறிமுறைக் கோட்பாட்டில் இது முற்றுமுழுதான உண்மையாக இல்லை.

**சாராம்சம்**

ரோல்ஸ்ஸின் நீதி பற்றிய கோட்பாடு சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பு பற்றி பேசுகின்றது. மாறாகத் தனிநபர் ஒழுக்கப்பண்பு பற்றியதல்ல. இது நீதியின் பொதுவான கருத்துக்கள் பற்றியும், விசேட கருத்துக்கள் பற்றியும் பேசுகின்றது. ஒரு சமூகம் போதுமான உயர்ந்த நிலைமையை அடைந்து கொண்டிருக்கும்போது அங்கு நீதியின் விசேட கருத்துக்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இத்தகைய விசேட கருத்துக்கள் நீதியின் இரட்டைத்தத்துவமாகும்.

01. விடுதலைக்கான தத்துவம்
02. வேறுபாட்டுத் தத்துவம்

விடுதலைக்கான தத்துவமானது ஒவ்வொரு தனிநபர்களும் மிகவும் கூடுதலான தனிநபர் சுதந்திரம், விடுதலையினைப் போதுமான அளவு பெற்றிருக்க வேண்டும். வேறுபாட்டுத் தத்துவம் இரு பிரிவுகளை் கொண்டது.

01. பொருளாதார அனுகூலங்களுக்கான பகிர்ந்தளிப்பு.
02. சமூக நிறுவனங்களின் பகிர்ந்தளிப்பு.

ரோல்ஸ் நீதியின் தத்துவத்தினை விளக்குவதற்காக மூன்று வகையான ஆராய்ச்சி முறைகளை விளக்கியிருக்கின்றார்.

01. நன்நெறி சார்ந்த தீர்ப்புக்கள் இல்லாத பிரதிபலிப்புக் கோட்பாடு
02. நன்நெறிசார்ந்த சுதந்திரத்தினைப் பெற்றிருக்க வேண்டும். அவை இயற்கையான உயர்வு, தாழ்வுகளை வெளிப்படுத்துவதாகவும் சகோதரத்துவ தத்துவத்தினை வெளிப்படுத்தவதாகவும் இருக்கின்றது.
03. மாற்றுவழிமுறைகளான பயன்நெறிமுறைக் கோட்பாடு போன்ற ஆரம்ப நிலையிலிருந்த கோட்பாடுகளைத் தெரிவு செய்தல் என்பனவாகும்.

**நூற்பெயர்க்கோவை**


1. Freeman, S., (ed), The Cambridge Companion to Rawls, (Cambridge, Cambridge University Press,2003).
2. Kymlicka W., Liberal equality. In: Contemporary political philosophy, (Oxford: Clarendon Press, 1990).
3. Mendus, S., Lectures on Rawls, (York, University of York,2005).
4. Rawls, J., A Theory of Justice original edition, (Cambridge, Harvard University Press,1971).
5. Ruth J.Sample., Philosophy; The Big Questions, (USA: Blackwell. Publishing Ltd, 2004).
6. Sebastiano Maffettone, Rawls An Introduction,(Cambridge: Polity Press, 2010).
7. Susan Moller Okin and Jane Mansbridge, Femisism,Schools of thought in politices 6,(England : Edward Elgar Publishing Limited,1994).